2026 ஜூன் மாதம் 15– ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 144/2020

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15– ஆம் தேதி திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1–வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – மனோகரன் |
| தந்தை பெயர்: | வீரசிக்கு |
| ஊர்: | க.புதுப்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 66 |

15.06.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் 3ம் வாதியாவேன். வாதி தரப்பு 1வது சாட்சியாவேன். 2ம் வாதிக்காகவும் சேர்த்து வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 01.08.2019 ம் தேதியிட்ட வாதிக்கு முத்துராமலிங்கம் எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டுக்கள் (எண்ணம் 5) (பின்புறம் எவ்வித மேலெழுத்துக்களும் இல்லை.) | **வா.சா.ஆ.1** | அசல் |
| 2. | 17.07.2020 ம் தேதியிட்ட அ.முத்துராமலிங்கத்தின் இறப்புச்சான்று | **வா.சா.ஆ.2** | ஒளிப்பதிவு நகல் |
| 3. | 10.10.2020 ம் தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பு, அஞ்சலக இரசீதுடன் (எண்ணம் 6) | **வா.சா.ஆ.3** | அலுவலக நகல் மற்றும் அசல் |
| 4. | 12.10.2020 ம் தேதியிட்ட வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை (எண்ணம் 6) | **வா.சா.ஆ.4** | அசல் |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>:– பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 15.06.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.15 16:43:21 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
15.06.2026.